# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.38/2020

Deposition of DW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 04.01.2024.

Evidence Recorded Time: 01.06 P.M to 01.20 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | இந்திரஜித் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | பெருமாள் கவுண்டர் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**கூடுதல் முதல் விசாரணை:-**

நான் இதில் பிரதிவாதியாவேன். நான் மேல் கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கூடுதல் சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின் வரும் ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவேண்டுகிறேன். 19.02.1973 ம் தேதியிட்ட தங்கம்மாள் பெயரில் உள்ள அசல் கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் ஒப்படைத்துள்ள ஆவணத்தின் படி அலமேலுவிடமிருந்து 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தைத்தான் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். 25.02.1971-ம் தேதியிட்ட பாககறார் பத்திரத்தின் படி அலமேலுவிற்கு 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் மட்டும் பாத்தியம் என்றால் பொதுவில் பாதி ஆகும். நான் அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பாகக்கறார் பத்திரத்தை வாதி தாக்கல் செய்த அதனை தரப்பில் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளார் என்றால் சரிதான். பாகக்கறார் பத்திரத்தில் சர்வே எண்.158/1-ல் 3 ஏக்கர் 15 செண்டில் பொதுவில் பாதி 1 ஏக்கர் 57 1/2 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகக்கறார் பத்திரத்திலேயே 1 ஏக்கர் 57 1/2 செண்ட் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நாங்களே பொய்யாக கையொப்பம் செய்து ஆவணத்தை

உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அலமேலுவிற்கு 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் மட்டுமே பாத்தியப்பட்ட நிலையில் 21 1/2 செண்ட் நிலம் அதிகமாக என் தாயாருக்கு கிரையம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக மேற்படி பத்திரம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பாகக்கறார் பத்திரத்தில் உள்ள அலமேலுவின் கையொப்பமும், கிரைய பத்திரத்தில் உள்ள அலமேலுவின் கையொப்பமும் மாறுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாணை வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.